# பத்திரிக்கை செய்தி

மிஷன் வத்சல்யா திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் தேர்விற்கான விண்ணப்பங்கள் வரவேற்பு - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதீக் தயாள், இ.ஆ.ப, அவர்கள் தகவல்

மிஷன் வத்சல்யா திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகில் ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற கீழ்கண்ட பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சமூகப்பணியாளர் (1 பணியிடம்) : தொகுப்பூதியம் - ரூ.18,536/- (ஒரு மாதத்திற்கு)**

i) சமூகப்பணி, சமூகவியல், சமூக அறிவியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இளங்கலை பட்டம் பெற்றவர்கள்.
ii) அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
iii) கணினி இயக்குவதில் திறன் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

i) Graduate Preferably in B.A in Social Work / Sociology / Social Sciences recognized University.
ii) Weightage for work experience candidate.
iii) Proficiency in computers.

01.06.2026 அன்றுபடி 42 வயதிற்கு பூர்த்தி அடையாதவர்களாக இருக்க வேண்டும்

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், சுயசான்றொப்பமிட்ட கல்விச்சான்றுகளின் நகல், பணி அனுபவ சான்றுகளின் நகல் இணைக்கப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்ப படிவங்கள், உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். மேற்கண்ட பணியிடம் தற்காலிகமாக ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலானது.

மேற்கண்ட பதவிகளுக்கான விண்ணப்படிவத்தினை https://tiruchirappalli.nic.in/ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் 16/06/2026 அன்று முதல் 30/06/2026 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்காணும் முகவரிக்கு வந்து சேரும் வகையில் (நேரிலோ/தபால் மூலமாகவோ) அனுப்பப்பட வேண்டும்.

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
N.E.1, முதல் தளம், மெக்டொனால்டு ரோடு,
கலையரங்கம் வளாகம்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

மேலும் விபரங்களுக்கு 0431-2413055 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரம் பெறலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
திருச்சிராப்பள்ளி.

2/2 15/06/2026